**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 57/2022**
**வழக்கு சாட்சி PW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாலகன் | தாலுகா | : | ஆலங்குளம் |
| தந்தை பெயர் | : | குத்தாலிங்கம் | தொழில் | : | தலைமைக்காவலர் |
| கிராமம் | : | காளத்திமடம் | வயது | : | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of July 22nd, 2025.

**(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது ஆலங்குளம் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்னர் தென்காசி காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வந்தேன். எதிரியை எனக்கு தெரியும். 30.05.2015 ம் தேதி, காலை 08.30 மணிக்கு நானும், பயிற்சி உதவி ஆய்வாளர் குருசாமி, காவலர் சக்கிர் ஆகியோர்கள் தென்காசி புதுபஸ்ஸ்டாண்ட் புறக்காவல்நிலையம் அருகில் ரோந்து செய்து கொண்டிருந்தபோது, சந்தேகத்திற்கிடமாக எதிரி மூக்காண்டி நின்று கொண்டிருந்தார். அவரிடம் காவலர் சக்கிர் எதற்காக இந்த இடத்தில் நிற்கிறீர்கள், என்று கேட்டார். அதற்கு எதிரி காவலர் சக்கிரிடம் "நீ எப்படி என்னை கேட்கலாம், நானும் ரவுடி தான், நீ சொன்னவுடன் போக முடியாது" என்று சொல்லி வாக்குவாதம் செய்தார். அப்போது, திடீரென காவலர் சக்கீரின் கன்னத்தில் எதிரி அவரது கையால் அடித்தார். நானும், பயிற்சி உதவி ஆய்வாளர் குருசாமியும் எதிரியை பிடிக்க போனபோது, எதிரி அவரது இடுப்பில் வைத்திருந்த கத்தியை எடுத்து "உங்களை

கொல்லாமல் விடமாட்டேன்" என்று மிரட்டினார். நாங்கள் அவரை மடக்கி பிடித்து காவல்நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிவு செய்வதற்கு நான் உதவியாக இருந்தேன். இது சம்பந்தமாக காவல்ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –

சம்பவத்தன்று காலை 08.00 மணியளவில் காவல்நிலையத்திலிருந்து கிளம்பினோம். பைக்கில் சென்றேன். நானும், சக்கீர் காவலரும் ஒரு வாகனத்தில் சென்றோம். பயிற்சி உதவியாளர் அவருடைய பைக்கில் வந்தார். எதிரியை சம்பவத்திற்கு முன்னால் நான் பார்த்ததில்லை என்றால் சரிதான். எதிரிக்கும், எனக்கும் வேறு முன்விரோதம் இல்லை என்றால் சரிதான். காயம்பட்ட நபர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்படவில்லை என்றால் சரிதான். நான் சிகிச்சை எடுத்து கொள்ளவில்லை. எதிரியை நாங்கள் 3 பேரும் சேர்ந்து காவல்நிலையத்திற்கு அழைத்து வந்தோம் என்றால் சரிதான். பைக்கில் தான் அழைத்து வந்தோம். என்னுடைய பைக்கில் அழைத்து வந்தேன். காவல்நிலையத்திற்கு போகும் வழியில் அரசு மருத்துவமனை உள்ளது என்றால் சரிதான். சக்கீர் என்பவர் முதலுதவி சிகிச்சை எடுத்த விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரியை காலை 09.00 மணிக்கு காவல்நிலையம் அழைத்து வந்தோம். நான் சொன்ன நாள், சொன்ன நேரத்தில் எதிரியை பார்க்கவில்லை என்றாலும், எதிரி குற்ற சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றாலும், எதிரியை காவல்நிலையத்திற்கு அழைத்து செல்லவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.07.22 19:43:04 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 57/2022**
**வழக்கு சாட்சி PW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சக்கீர் | தாலுகா | : | கிள்ளியூர் |
| தந்தை பெயர் | : | முகைதீன் | தொழில் | : | தலைமைக்காவலர் |
| கிராமம் | : | லிங்கராஜபுரம் | வயது | : | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of July 22nd, 2025.

**(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது தக்கலை காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்னர் தென்காசி காவல்நிலையத்தில் காவலராக பணிபுரிந்து வந்தேன். எதிரியை எனக்கு தெரியும். 30.05.2015 ம் தேதி, காலை 08.30 மணிக்கு நானும், பயிற்சி உதவி ஆய்வாளர் குருசாமி, தலைமைக்காவலர் பாலகன் ஆகியோர்கள் தென்காசி புதுபஸ்ஸ்டாண்ட் புறக்காவல்நிலையம் அருகில் ரோந்து செய்து கொண்டிருந்தபோது, சந்தேகத்திற்கிடமாக ஒருநபர் நின்று கொண்டிருந்தார். பின்னர் அவரின் பெயர், விலாசம் அம்பை தாலுகா, இலட்சுமண தேவர் மகன் மூக்காண்டி என தெரிந்து கொண்டோம். அவரை விசாரிக்கும் போது, "நீ யார் என்னை விசாரிக்கலாம், நான் அம்பை தாலுகாவில் பெரிய ரவுடி என்றும், தேவடியா மவனே" என்றும் கெட்ட வார்த்தைகளால் பேசி எனது சட்டையை பிடித்து கீழே தள்ளி காலால் மிதித்து எங்களை அரசு பணியை செய்ய விடாமல் தடுத்து, கத்தியை எடுத்து "இத்தோடு செத்து தொலை தேவடியா மவனே"

என்று சொல்லி எனது கழுத்தில் குத்த வந்தார். அப்போது, அருகில் நின்று கொண்டிருந்த உதவி ஆய்வாளர் குருசாமியும், தலைமைக் காவலர் பாலகன் ஆகியோர்கள் சேர்ந்து எதிரியை பிடித்தார்கள். அப்போது, எதிரி எங்கள் அனைவரையும் பார்த்து "கொல்லாமல் விடமாட்டேன்" என்று கொலை மிரட்டல் விடுத்தார். பிறகு எதிரியை பிடித்து காவல்நிலையம் கொண்டு வந்தோம். உதவி ஆய்வாளர் தனி அறிக்கை இது குறித்து கொடுத்தார்.

என்னிடம் காண்பிக்கப்படும் ஆயுதத்தை தான் அன்றைய தினம் எதிரி வைத்திருந்தாரா, என்று என்னால் தற்போது சொல்ல முடியாது. எனக்கு வெளிக்காயம் இல்லை. நான் தென்காசி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்தேன். அங்கு 3 நாட்கள் சிகிச்சை எடுத்து கொண்டதாக நினைக்கிறேன். எனக்கு நியாபகமில்லை. இது சம்பந்தமாக காவல்ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –

சம்பவத்தன்று காலை 08.30 மணியளவில் காவல்நிலையத்திலிருந்து கிளம்பினோம். எதிரியை முதலில் நான் தான் விசாரிக்க சென்றேன். அவருடைய பெயர், விலாசம் யாரிடம் கேட்டு தெரிந்து கொண்டேன் என்றால் காவல்நிலையத்தில் இருந்த ரைட்டர் சொன்னார். என்னை கீழே தள்ளி விட்டு நெஞ்சில் மிதித்து, குத்த வந்தார். இந்த சம்பவம் நடந்ததாக கூறப்பட்டுள்ள இடம் புறக்காவல்நிலையத்திற்கு அருகில் என்றால் சரிதான். புறக்காவல்நிலையத்திற்கு தகவல்

கொடுக்கவில்லை என்றால் சரிதான். உண்மையிலேயே இந்த சம்பவம் நடந்திருந்தால் முதலில் புறக்காவல்நிலையத்திற்கு தகவல் கொடுத்திருப்போம் என்றால் சரியல்ல.

காவல்நிலையத்திலிருந்து சம்பவயிடத்திற்கு பைக்கில் வந்தோம். தலைமைக்காவலர் பாலகன் மற்றும் உதவி ஆய்வாளர் குருசாமி ஆகியோர்களுடைய பைக்கில் வந்தோம். எதிரியை தலைமைக்காவலர் பாலகன் அழைத்து வந்தார். எதிரியை பிடித்து காவல்நிலையம் கொண்டு வரும் அளவில் எனக்கு பலம் இருந்தது என்றால் சரிதான். காவல்நிலையத்திற்கு காலை 09.00 மணியளவில் வந்தோம். நான் சொன்ன நாள், சொன்ன நேரத்தில் எதிரியை பார்க்கவில்லை என்றாலும், எதிரி குற்ற சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றாலும், எதிரியை காவல்நிலையத்திற்கு அழைத்து செல்லவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.07.22 19:43:15 +0530